தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர், சென்னை–8 செயல்முறை ஆணைகள் .
முன்னிலை.திரு.பொ. சிவப்பிரசாத், எம்.எஸ்.சி.எம்.எட்.,

எண். 3663/நா2/2019 நாள்.19.07.2021.

பொருள்: பணிவரன் முறை – சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை நன்னடத்தைப் பிரிவு – திருமதி.அசீனிவாசுகி, இளநிலை உதவியாளர், தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் அலுவலகம் சென்னை என்பவர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி–4 தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு சிறைத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிபுரிந்து வருவது இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறைபடுத்தி ஆணை பிறப்பித்தல் – குறித்து

பார்வை–
1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சென்னை கடித எண். 1350/PSD-G1/2019, நாள்.16.02.2019
2. காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவர் சென்னை குறிப்பாணை எண்.7394/இஎஸ்1/2019– 6, நாள்.01.03.2019
3. பாளையங்கோட்டை, மத்திய சிறை கண்காணிப்பாளர் செயல்முறை ஆணை எண். 9559/பொ1/2019, நாள்.09.03.2019
4. கூடுதல் காவல்துறை இயக்குநர் / சிறைத்துறை தலைவர் செயல்முறை ஆணை எண். 7394/இ.எஸ்.1/2019 நாள். 26.06.2019
5. தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் செயல்முறை ஆணை எண்.3008/பொ2/2019 நாள். 05.07.20219

•••••

தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளரால் கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) திருமதி.அசீனிவாசுகி, இளநிலை உதவியாளர், பார்வை ஒன்றில் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடிதம் மூலம் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை இரண்டில் காணும் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவரின் செயல்முறை ஆணையின் பேரில், சிறைத்துறையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு, பார்வை மூன்றில் காணும் பாளையங்கோட்டை, மத்திய சிறை கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணையின்படி பாளையங்கோட்டை, மத்திய சிறை அலுவலகத்தில் 08.03.2019 முற்பகல் பணிக்கு ஆஜராகி அன்று முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

பின்னர் பார்வை நான்கில் காணும் கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவரின் செயல்முறை ஆணையின்படி தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு பார்வை ஐந்தில் காணும் தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் செயல்முறை ஆணையின்படி இவ்வலுவலகத்தில் 05.07.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பதவியில் பணிபுரிந்து வருகின்றார்.

3) திருமதி.அ.சீனிவாசுகி, இளநிலை உதவியாளர், பணிநியமனம் முற்றிலும் தற்காலிகமானது, இவரது பணி நியமனம் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையினை Combined Civil Service Examination -IV 2015-2018 தொடர்பாக நிலுவையிலுள்ள வழக்குகளின் (WPs it any pending) முடிவுக்கு உட்பட்டது.

4) திருமதி.அ.சீனிவாசுகி, இளநிலை உதவியாளர், பதவியில் பணி நியமனம் பெற்று பணிக்கு ஆஜரான நாளான 08.03.2021 முற்பகல் முதல் இவரது பணி இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைபடுத்தி தமிழ்நாடு அமைச்சுப் பணி நூல் விதி எண்.32(a) (i)-ன்படி மூன்றாண்டு தொடர்பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்து இத்தகுதிகாண் பருவ காலத்தில் கீழ்க்காணும் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

1) தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல்
2) பவானிசாகர் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும்.

*****

[signature] 19/7/2021

தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர்,
சென்னை-8.

பெறுநர்

திருமதி.அ.சீனிவாசுகி, இளநிலை உதவியாளர்,
தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் அலுவலகம், சென்னை.

நகல்- பணிப்பதிவேடு
நகல்- தநககா/ அமே/ ந2 (இ. கோ)

19/7/2021